# மீனம்பாக்கம் மெட்ரோ ரயில் நிலையத்தில் ஈரடுக்கு இருசக்கர வாகனங்கள் நிறுத்தும் வசதி




சென்னை மீனம்பாக்கம் மெட்ரோ ரயில் நிலைய வாகன நிறுத்தும் இடத்தில் ஈரடுக்கு இருசக்கர வாகனம் நிறுத்தும் வசதியை தொடங்கி வைத்த சென்னை மெட்ரோ நிறுவன இயக்குநர் (இயக்கம் மற்றும் அமைப்புகள்) எல்.நரசிம் பிரசாத். உடன் ஸ்விஃப்ட் பவர் திட்ட இன்ஜினியரிங் பிரைவேட் லிமிடெட் மேலாண் இயக்குநர் எஸ்.பிரபு உள்ளிட்ட அதிகாரிகள்.

சென்னை, ஜன.2: பயணிகள் தங்கள் இருசக்கர வாகனத்தை நிறுத்துவதற்கு வசதியாக, மீனம்பாக்கம் மெட்ரோ ரயில் நிலையத்தில் ஈரடுக்கு இருசக்கர வாகனங்கள் நிறுத்தும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த வசதியை மேலும் பல மெட்ரோ ரயில் நிலைய வாகன நிறுத்தமிடங்களில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர்.

சென்னை மெட்ரோ ரயில் பயணிகளின் வசதிக்காக, சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் பல்வேறு வசதிகளை செய்து வருகிறது. அந்த வகையில், பயணிகள் தங்கள் இருசக்கர வாகனத்தை நிறுத்துவதற்கு வசதியாக, மீனம்பாக்கம் மெட்ரோ ரயில் நிலையத்தின் வாகன நிறுத்தும் இடத்தில், ஈரடுக்கு இருசக்கர வாகனங்கள் நிறுத்தம் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த வசதியை சென்னை மெட்ரோ ரயில் நிறுவன இயக்குநர்(இயக்கம் மற்றும் அமைப்புகள்) எல்.நரசிம் பிரசாத் தொடக்கிவைத்தார்.

இது குறித்து, மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறியது: இந்த வசதியை ஏற்படுத்தியது மூலம், தரைத்தளத்தில் 5 இருசக்கர வாகனங்களும், தரையில் இருந்து 9 அடி உயர்த்தில் 5 இருசக்கர வாகனங்களும் நிறுத்தலாம். இதனால், இடப்பாற்றாக்குறையை தவிர்க்க முடியும்.

5 இருசக்கர வாகனங்கள் நிறுத்துமிடத்தில் 10 இருசக்கர வாகனங்களை நிறுத்தலாம். ஹைட்ராலிக் மூலம் இருசக்கர வாகனங்கள் மேலே கொண்டு செல்லப்படுகின்றன. புவிஈர்ப்பு விசையின் மூலம் வாகனங்கள் கீழே இறக்கப்படுகின்றன. இந்த வசதியை, மேலும் பல மெட்ரோ ரயில் நிலைய வாகன நிறுத்துமிடங்களில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது என்றனர்.